நீலகிரி மாவட்டத்தில்

# நீர் நிலைகளை பாதுகாக்க நடவடிக்கை

## கலெக்டர் சுப்ரியா பேச்சு

ஊட்டி,ஏப். 28—

நீலகிரி மாவட்டத்தில் நீர் நிலைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீலகிரி மாவட்ட கலெக்டர் கூறினார்.

ஊட்டியில் நீர் ஆதாரங்களை பெருக்குவது பற்றி கருத்தரங்கு மாவட்ட கலெக்டர் சுப்ரியா சாகு தலைமையில் நடந்தது.

### கருத்தரங்கு

நீலகிரி மாவட்டம் ஊட்டி சவாய் ஹோட்டலில் நீர் ஆதாரங்களை பெருக்கும் திட்டம் குறித்த கருத்தரங்கு நீலகிரி மாவட்ட கலெக்டர் சுப்ரியா சாகு தலைமையில் நடந்தது. இந்த கருத்தரங்கில் கலெக்டர் சுப்ரியாசாகு குத்துவிளக்கு ஏற்றி வைத்து பேசும்போது கூறியதாவது:—

நீலகிரி மாவட்ட மக்களுக்காக மாவட்ட நிர்வாகம், நகராட்சி நிர்வாகம், நல்ல குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளது. நமது மாவட்டத்தில் மழை குறைய காரணம் வனப்பகுதி மரங்கள் வெட்டப்படுவதுதான்.

### கிராமப் பகுதி

தற்போது மாவட்டத்தில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் வனப்பகுதிகளில் வாழும் ஆதிவாசிகளுக்கும் பைப்லைன் மூலமாக குடிநீர் கிடைக்க செய்துள்ளோம். தமிழ்நாட்டில் மழை நீரை சேமிக்கும் பழக்கம் முன் காலங்களில் இருந்து வருகிறது. கிராமங்களில் ஊரனி, தண்ணீர் தொட்டிகள், குளங்கள் போன்று அமைத்து நீர் ஆதாரங்களை பெருக்கி வருகின்றனர்.

தற்போது நமது மாவட்டத்தில் நிலத்தடி நீர் குறைந்து வருகிறது. அதற்கு மாநில அரசும், மாவட்ட நிர்வாகமும் மழைநீர் சேகரிப்பு பற்றிய தகவல் அடங்கிய புத்தகத்தை வெளியிட்டுள்ளது.

### மழை நீர் தொட்டி

மாவட்ட நிர்வாகம் மூலமாக துண்டு பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும் மழைநீர் சேகரிக்க மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் 35 ஆயிரம் லிட்டர் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. இது போல் வீடு மற்றும் ஓட்டல்கள், அரசு விருந்தினர் மாளிகை, மற்ற இடங்களிலும் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் எல்லா சாதியினரும் வாழ்கிறார்கள். முக்கியமாக ஆதிவாசிகள் 25 சதவிகிதம்பேர் உள்ளனர். மாநிலத்தில் மலை மாவட்டமாக நமது மாவட்டம் திகழ்கிறது. இயற்கையான தண்ணீர் சேமிக்க மாவட்டத்தில் 25 இடங்களில் செக்டேம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் மூலமாக பல கிராமங்களுக்கும் குழாய் மூலமாக குடிநீர் வசதி செய்துள்ளோம்.

நமது மாவட்டத்தில் வனப்பகுதிகளையும், புல்வெளிகளையும் குடிநீருக்காக நம்பி உள்ளோம். மாவட்டத்தில் நீர் ஆதாரங்கள் முக்குருத்தி, பைக்காரா, ஊட்டி போன்ற இடங்கள் ஆகும்.

ஊட்டி நகராட்சியில் 1991—ம் ஆண்டில் மக்கள் தொகை 80 ஆயிரம் பேர் இருந்தனர். ஆனால் 2001ம் ஆண்டு மக்கள்

(4—ம் பத்தி பார்க்க)

8—ம் பத்தி தொடர்ச்சி

தொகை 1 லட்சத்து 15 ஆயிரம் ஆக உயர்ந்துள்ளது. நகராட்சி பகுதிகளில் வசிக்கக் கூடிய மக்களுக்கு குடிநீர் தினமும் 90 ஆயிரம் லிட்டர் பைப்லைன், வாகனம் போன்றவை மூலமாக வழங்கி வருகிறோம்.

இரு நகராட்சிகளில் சராசரியாக ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 90 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

குன்னூர் நகராட்சி பகுதியில் வசிக்கக்கூடிய மக்களுக்கு தினமும் 40.6 ஆயிரம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு கலெக்டர் சுப்ரியா சாகு பேசினார்.

### கலந்து கொண்டவர்கள்

இக்கருத்தரங்கில் மண்டல ஆணையர் ஸ்ரீபதி, மாவட்ட மின் பொறியாளர் சுந்தரமகாலிங்கம், ஊட்டி நகராட்சி ஆணையர் சிவனு, குன்னூர் நகராட்சி ஆணையர் ராஜநாயகம், நீலகிரி சேவா சங்கம் தலைவர் பி. ஜே.கிருஷ்ணன், டாக்டர் சிக்கா, தோடர் நலச்சங்கத் தலைவர்தாருண், மயிராடா தலைவர் ராஜ்குமார், நீலகிரி ஆதிவாசிகள் சங்கத்தலைவர் ஆல்வாஸ், சவுந்தரராஜன், பீமன் மற்றும் தன்னார்வ தொண்டு பிரதிநிதிகள் விவசாயிகள் கலந்து கொண்டனர். இதன் ஏற்பாடுகளை கோத்தகிரி கீஸ்டோன் நிறுவனம் செய்திருந்தது.